# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

**புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 யூலையில் விரிவடைந்தன**

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது 2021 யூனுடன் ஒப்பிடுகையில் 7.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 57.8 சுட்டெண் பெறுமதியொன்றினை பதிவுசெய்து 2021 யூலையில் மேலும் அதிகரித்தது.** இதற்கு, புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளில் இருப்பு துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் பிரதான காரணமாக அமைந்தது.

புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளில் இருப்பு துணைச் சுட்டெண்களில் குறிப்பாக புடவை மற்றும் அணியும் ஆடை அத்துடன் குடிபானத் துறைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள், கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் கணிசமான மேம்பாட்டிற்கு முக்கியமாகப் பங்களித்தன. பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலை அடைந்தமை மூலம், விசேடமாக ஐரோப்பாவிலிருந்து உயர்வான ஏற்றுமதிக் கட்டளைகள் தமக்குக் கிடைக்கப்பெற்றன என்றும் எதிர்கால கேள்வி எதிர்பார்க்கையுடனும் கொவிட்-19 தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தைத் தொடர்ந்தும் புதிய ஆட்சேர்ப்புக்களை தாம் மீளத்தொடங்கியதாகவும் இத்துறைகளிலுள்ள பதிலிறுப்பாளர்களில் சிலர் சுட்டிக்காட்டினர்.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **50.4** | **57.8** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 52.1 | 61.5 | + | உயர்வடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 43.2 | 54.0 | + | அதிகரிக்கின்றது, வீழ்ச்சியிலிருந்து |
| தொழில்நிலை | 45.8 | 52.0 | + | அதிகரிக்கின்றது, வீழ்ச்சியிலிருந்து |
| கொள்வனவுகளின் இருப்பு | 45.3 | 51.0 | + | அதிகரிக்கின்றது, வீழ்ச்சியிலிருந்து |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 68.9 | 69.0 | + | நீட்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, 2021 யூலையில் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் விரிவடைதலுக்கிசைவாக கொள்வனவுகளில் இருப்பு துணைச் சுட்டெண் அதிகரித்த அதேவேளையில் நிரம்பலர் விநியோக நேரம் தொடர்ந்தும் நீட்சியடைந்து. நாணயக் கடிதங்களைத் திறத்தலில் காணப்பட்ட தாமதங்களும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகளில் தாமதங்களும் மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்ற வழங்கல் சங்கிலியினை வெகுவாகப் பாதித்தன என பல பதிலிறுப்பாளர்கள் வலியுறுத்தினர். இது அவர்களது உற்பத்தி அட்டவணைகளுக்கு இடையூறுகளைத் தோற்றுவித்துள்ளது.

கொவிட்-19 வைரஸின் வேகமாகப் பரவுகின்றமை நாட்டின் தயாரிப்பு நடவடிக்கைகளைத் தடைப்படுத்தும் என்ற நிச்சயமின்மை பற்றி தயாரிப்பாளர்கள் எச்சரிக்கை விடுத்தனர். அதற்கமைய, அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகளும் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு சீர்குலைந்தன, இருந்தும் நடுநிலையான அடிப்படை அளவு மட்டத்திற்கு மேல் காணப்பட்டன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி**

**57.8**

**2021 யூனுடன் ஒப்பிடுகையில் 7.4 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2021 யூனிலிருந்து 0.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றுடன் 2021 யூலையில் 55.4 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சுட்டெண்கள் உயர்வான வீதத்தில் அதிகரித்த அதேவேளை ஐரோப்பா, ஐக்கிய இராச்சியம், மற்றும் சீனா ஆகிய நாடுகளின் கொ.மு.சுட்டெண் பெறுமதிகள் மெதுவான வேகத்தில் அதிகரித்தன. அதேவேளை, ரஷ்யா, 2021 யூலையில் தயாரிப்பு கொ.மு.சுட்டெண்களில் மேலும் சீர்குலைவொன்றினைச் சுட்டிக்காட்டின.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 ஓகத்து 13இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணி நடவடிக்கைகளின் மேலும் விரிவாக்கத்தினை சமிக்ஞைப்படுத்தி, பணிகள் கொ.மு.சுட்டெண் 2021 யூலையில் 55.7 இனைக் கொண்ட சுட்டெண் பெறுமதிக்கு மேலும் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பானது புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கை, நிலுவையிலுள்ள பணி அத்துடன் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பனவற்றில் காணப்பட்ட அதிகரிப்புக்களினால் தூண்டப்பட்டிருந்தது.

நிதியியல் பணிகள், காப்புறுதி, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, உண்மைச் சொத்து துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் 2021 யூனுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் புதிய வியாபாரங்கள் அதிகரித்தன.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமைக்கமைக்கிணங்க அநேகமான துணைத் துறைகள் முழுவதும் வியாபார நடவடிக்கைகள் துணைத் துறைச் சுட்டெண்கள் யூலையில் அதிகரித்தன. அதற்கமைய, மாதகாலப்பகுதியில் நிதியியல் பணிகள் துணைத் துறை பாரிய மேம்பாடொன்றினை அறிக்கையிட்டது. பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு அளவுகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சிகளுடன் போக்குவரத்து துணைத் துறையும் கணிசமான முன்னேற்றத்தைக் கண்ணுற்றது. மேலும், மனித நலம், காப்புறுதி, தொலைத் தொடர்பு துணைத் துறைகளும் மாதகாலப்பகுதியில் மேம்பட்டன. அதேவேளை, பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து வியாபாரத் தொழிற்பாடுகள் மீளத் தொடங்கப்பட்டமை மற்றும் கேள்வியில் மீட்சி என்பன காரணமாக மொத்த, சில்லறை வர்த்தகம் அத்துடன் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறைகளும் சாதகமான அபிவிருத்திகளை அறிக்கையிட்டன.

ஓய்வுபெறுதலும் பதவிவிலகுதலும் மாதகாலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையினை விஞ்சியமையினால் தொழில்நிலை தொடர்ந்தும் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது.

நிலுவையிலுள்ள பணிகள் யூலையில் குறைவான வேகத்திலேனும் அதிகரித்தன.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **51.3** | **55.7** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** |
| புதிய வியாபாரங்கள் | 49.0 | 58.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| வியாபார நடவடிக்கை | 49.0 | 63.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 46.1 | 49.0 | - | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 54.2 | 53.2 | + | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 58.3 | 54.5 | + | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியமையுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் யூலையில் தொடர்ந்தும் அதிகரித்தன. எனினும், கொவிட்-19 இன் மூன்றாம் அலையின் விரைவான பரவல், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், நாணயக் கடிதங்களைத் திறப்பதில் தாமதங்கள் அத்துடன் உள்ளீட்டுச் செலவுகளின் அதிகரிப்பு என்பவற்றுக்கமைவாக சில பதிலிறுப்பாளர்களின் எதிர்பார்க்கைகள் மாறாக சாதகமற்றதாகக் காணப்பட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**55.7**

2021 யூனுடன் ஒப்பிடுகையில் 4.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் -பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, உலகளாவிய பணி நடவடிக்கைகளில் மேலதிக விரிவடைதலொன்றினைச் சமிக்ஞைப்படுத்திய போதிலும் 2021 யூனின் 57.5 இலிருந்து குறைவடைந்து 2021 யூலையில் 56.3 இனைப் பதிவுசெய்தது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை, இந்தியா மற்றும் யப்பானின் ஆகிய நாடுகளின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], ஓகத்து 13, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.